**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**<u>O.S. NO.124/2020</u>**

**<u>04.07.2023 - வா.சா. 1 அய்யாசாமி சத்திய பிரமாணத்தின் பேரில் 1 முதல் 9, 11 மற்றும் 12 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

பழனி என்பவர் அவருடைய மனைவி ஜெயலட்சுமி பெயரில் சர்வே எண் 2/6சி 1830 சதுரடியை 5.10.2009ல் தான செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண் 2/6சி - 7 சென்டை தாவாசொத்தில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். ஆனால் என்னுடைய அறிவிப்பு வா.சா.ஆ.3 ல் 3வது அயிட்டமாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். சர்வே எண் 2/6சி தாவா இன சொத்தில் காட்டப்படவில்லை. தாவா 1வது இன சொத்து மோட்டார் பம்பு செட்டை சுப்பிரமணி, பழனி, அண்ணாதுரைக்கு ஒதுக்கப்பட்டது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

தாவா 1வது இன சொத்துக்கு பட்டா எண் 282 அண்ணாதுரை, சுப்பிரமணி மற்றும் பழனிக்கு கூட்டாக ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. அவர்கள் மூன்று பேரும் தான் கிணறு பம்பு செட்டை அனுபவித்து வருகிறார்கள் என்றால் தெரியாது. தாவா 2வது அயிட்ட சொத்தில் கிணறு பம்பு செட் இல்லை என்றும், தவறாக சொத்து விவரத்தில் கிணறு பம்பு செட் உள்ளதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா 2வது இன சொத்து 54 செண்ட் சுப்பிரமணி பாகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

தாவா 3வது இன சொத்து 2/9ஏ 5 ஏர்ஸ் என்றும், ஆனால் அது 1/2 ஏர்ஸ் தான் என்று சொன்னால் அதைப்பற்றி தெரியாது. சர்வே எண் 2/9 ஏ என்னுடைய பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அதில் ஏற்கனவே ஒரு ஓட்டு வீடு இருந்தது என்றால் சரிதான். 10 ஆண்டுகளுக்கு முன் அதில் மெத்தை வீடு கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. 25.9.2009ல் தாவா

2வது இன சொத்தை சுப்பிரமணியும் அவரது மகன் கார்த்திக்கும், கருணாகரன் மனைவி மீனாவிற்கு கிரையம் கொடுத்து உள்ளார்கள் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அந்த இடத்தை இன்று வரையில் கிரையம் பெற்ற மீனா அனுபவித்து வருகிறார்கள் என்றால் தெரியாது. மீனாவை 12வது பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். எதற்காக சேர்த்துள்ளேன் என்று எனக்கு தெரியாது.

தாவா 4வது இன சொத்து 2/9பி வேலுவின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அச்சொத்தில் ஏற்கனவே ஒரு ஓட்டு வீடு இருந்தது என்றால் தெரியாது. வேலு சிமெண்ட் ஷீட் போட்ட வீடு கட்டி மின் இணைப்பும் அவர் பெயரில் பெற்றுள்ளார் என்றால் அது அவருக்கு தான் தெரியும். 4வது இன சொத்தில் அதனை பற்றிய குறிப்பு இல்லை என்று சொன்னால் எனக்கு தெரியாது.

பழனியின் பாகத்திற்கு தாவா 5 முதல் 8, 10, 12, 14, 16, 21 மற்றும் 23 ஆகியவைகள் ஒதுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. மேற்சொன்ன இன சொத்திற்கு பழனியின் பேருக்கு தனிப்பட்டாவும் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா 14வது இன சொத்தில் பழனி தட்டோடு வீடு கட்டி அதில் மின் இணைப்பும் பெற்றுள்ளார் என்றால் சரிதான். ஆனால் 14வது இன சொத்தில் அதனை பற்றிய குறிப்பு இல்லை என்றால் சரிதான்.

தாவா 9, 13, 15, 22 மற்றும் 24 ஆகிய இன சொத்துக்கள் 8ம் பிரதிவாதி அண்ணாதுரை பாகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா 22இன சொத்தில் அண்ணாதுரை 500 அடிக்கு போர் போட்டு 5 எச்.பி மின் மோட்டார் போட்டு அவர் பெயரில் மின் இணைப்பு 023-1400-9243 வாங்கியுள்ளார் என்று சொன்னால் 22வது இன சொத்தில் போர் இல்லை.

அண்ணாதுரை அவருக்கு பாகம் வந்த சொத்துக்களை அவருடைய மனைவி இந்திராவிற்கு 6.12.2020 தேதியிட்ட கிரைய பத்திரம் முன்னிலைக்கு கிரையம் கொடுத்து விட்டார் என்று சொன்னால் சரியல்ல.

சர்வே எண் 2/8ஏ ல் 0.02.0 ஏர்ஸ் சுப்பிரமணி என்பவருக்கு பாகத்தில் ஒதுக்கப்பட்டது என்றால் பாகம் ஏற்படவில்லை. அதில் ஏற்கனவே பழைய மெத்தை வீடு இருந்தது என்றால் சரியல்ல. மேற்சொன்ன 2 ஏர்ஸில் 5.3.2001ல் சுப்பிரமணி என்பவர் சர்வே எண். 2/8ஏல் கிழக்குபுறம் 1397 சதுரடி காலி இடத்தை 14வது பிரதிவாதி வடிவேல் என்பவருக்கு ரூ. 22 ஆயிரத்திற்கு கிரையம் கொடுத்து விட்டார் என்று சொன்னால் சரியல்ல. அந்த கிரையப்பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் நான் போகவில்லை, கையெழுத்தும் போடவில்லை.

வேலு என்பவருக்கு தாவா 4, 11, 16, 19, 20, 26 முதல் 30 மற்றும் 32 இன சொத்துக்கள் பாகத்தில் ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. 11வது இன சொத்தில் 5 ஹெக்டேர் என்று தவறுதலாக தாவாவில் குறிப்பிட்டுள்ளேன் என்றும் 1/2 ஹெக்டேர் தான் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவா 31இன சொத்தில் பழைய கிணறும் ஒரு ஆயில் இன்ஜினும் உள்ளது என்றால் சரிதான். அச்சொத்து எனக்கும், வேலுவிற்கும் கூட்டாக ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

வேலு தாவா 11 மற்றும் 20 வது இன சொத்துக்களை வெள்ளைய கவுண்டர் மகன் பழனி என்பவருக்கு 29.12.2004 தேதியிட்ட கிரையப் பத்திரத்தின் அடிப்படையில் கிரையம் கொடுத்து விட்டார் என்றால் சரியல்ல. அந்த கிரையப் பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

தாவா 18 இன சொத்தில் பழைய தட்டோடு வீடு இருந்தது என்றால் சரிதான். ஆனால் தாவா சொத்து விவரத்தில் தட்டோடு வீடு பற்றி குறிப்பு இல்லை என்றால் சரிதான். ச்ர்வே எண் 8/2பி-ல் நான் மெத்தை வீடு கட்டி மின் இணைப்பு பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. எங்களுக்குள் பாகம் 16.9.2000 ஏற்பட்டு அவரவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை அவரவர் அனுபவித்து வருகிறோம் என்றால் சரியல்ல.

7.4.2003 பாகப்பத்திரப்படி அனைவரும் மனு கொடுத்து உரிய விசாரணைக்கு பிறகு உட்பிரிவு செய்யப்பட்டு தனிப்பட்டா வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. ஏற்கனவே பாகம் பிரிக்கப்பட்டு தனிப்பட்டா பெற்று அனுபவித்து வருவதால் காலம் கடந்து வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனவே எனக்கோ, 2 முதல் 5 வாதிகளுக்கோ பாகம் கோர உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

<u>13வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u> -

ச்ர்வே எண் 2/14 தாவா 17வது இன சொத்து வேலுவின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. 26.7.1999 ந் தேதி ஒரு பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரம் முன்னிலைக்கு ஆறுமுகம் குமாரர் சிவராஜிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அந்த கிரையப் பத்திரத்தில் நானும் என் சகோதரர்களும் கையெழுத்து போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. அந்த கிரையப்பத்திரத்தில் பக்கம் எண் 3ல் எங்களுக்குள் வாய்மொழியாக பாகம் ஏற்பட்டது என்றும், அச்சொத்து வேலுவின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டதாக குறிப்பு உள்ளது என்றால் சரியல்ல. கிரையதாரர் ஆறுமுகம் என்பவரை தெரியாது.

அந்த இடத்தில் அவர் ஒரு ஓட்டு வீடு கட்டி, வீட்டு வரி ரசீது செலுத்தி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. வேலு தான் அதில் ஓட்டு வீடு கட்டியுள்ளார்.

அந்த வீட்டை பாரத ஸ்டேட் வங்கி, வானாபுரத்தில் ரூ. 7 1/2 லட்சத்திற்கு அடமானக்கடன் பெற்றுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. அந்த கடனை பைசல் செய்த பிறகு 13வது பிரதிவாதி தன் மகன் முருகேசனுக்கு தான செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் தெரியாது. தாவா 17வது இன சொத்திற்கு முருகேசன் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா 17வது இன சொத்து முருகேசனின் தனிப்பட்ட சொத்தாக அனுபவித்து வருகிறார் என்றும், என் சகோதரர்கள் மீது உள்ள காழ்ப்புணர்ச்சி காரணமாக அவரை பிரதிவாதியாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. காலம் கடந்து வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/- அய்யாசாமி

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.